# ஸ்ரீ அருணோதயம்

## மாற்றுத்திறனாளிகள் துறையில் முதல் முறையாக ‘பெண்களுக்கு அங்கீகாரம் & அதிகாரமளித்தல்’ திட்டம்

2019 விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் இறுதிப் பட்டியலை ஸ்ரீ அருணோதயம் அமைப்பு அறிவித்துள்ளது.

**கொளத்தூர், சென்னை, இந்தியா:** பெற்றோரால் கைவிடப்பட்ட, அறிவுசார் குறைபாடுடைய குழந்தைகள் பராமரிப்பு இல்லமான ஸ்ரீ அருணோதயம், ‘சிறப்பு அன்னையர்’ விருது -2019-க்கு தேர்வு செய்யப்பட்டவர்களின் பெயர்களை அறிவிப்பதில் பேருவகை அடைகிறது.

இந்தியாவிலும் உலக அளவிலும் அன்னையர்களைப் போற்றும் வகையில் பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டு வந்தாலும், சிறப்புக்* குழந்தைகளின் பெற்றோர்களை பாராட்டும் வகையில், அருணோதயம் அமைப்பால் வழங்கப்படும் விருது தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். இதன் காரணமாக மனநலக் குறைபாடு மற்றும் அறிவுசார் குறைபாடு தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் தனித்தன்மை கொண்ட அமைப்பாகத் திகழ்கிறது. விருதுக்குத் தேர்தெடுக்கப்பட்டவர்கள் சிறப்புக் குழந்தைகளின் தாய்மார்கள் என்பதோடு, இந்த ஆண்டு தென்னிந்தியா முழுவதுமிருந்து பெறப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்களிலிருந்து, தலைசிறந்த நடுவர்குழு மூலம் கடுமையான தேர்வு நடைமுறைகளை கடந்துவந்தவர்கள் ஆவர்.

2017-ல், ‘சிறப்பு அன்னையர்’ விருது அறிமுகம் செய்யப்பட்ட போது, தங்களது சிறப்புக் குழந்தைகளின் வாழ்க்கை, குடும்பங்கள் மற்றும் சமுதாயத்தின் மீது குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்திய அன்னையர்களை ஆதரித்து அவர்களது நற்பண்புகள் மற்றும்

முன்னேற்றமான திறமைகளுக்கு ஆதரவளிக்க ஸ்ரீ அருணோதயம் அமைப்பு உறுதிபூண்டது.

**2019 விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட 15 பேர் வருமாறு:**

1) **ஆசியா பெனாசிர் எஸ்**, விருதுநகர், தமிழ்நாடு
2) **பேபி ஆர்,** கடலூர், தமிழ்நாடு
3) **சிதம்பரம் கோமதி,** திருநெல்வேலி, தமிழ்நாடு
4) **ஜெயந்தி எம்,** சென்னை, தமிழ்நாடு
5) **கலாவதி,** திருவள்ளூர், தமிழ்நாடு
6) **லக்ஷ்மி பி,** திருநெல்வேலி, தமிழ்நாடு
7) **லக்ஷ்மி சுனிதா,** கிழக்கு கோதாவரி, ஆந்திரபிரதேசம்
8) **நளினி ஆர்,** கிருஷ்ணகிரி, தமிழ்நாடு
9) **பொன்ராஜ் எம்,** சென்னை, தமிழ்நாடு
10) **ராதா நந்தகுமார்,** சென்னை, தமிழ்நாடு
11) **ராஜாக்கிளி கே,** கன்னியாகுமரி, தமிழ்நாடு
12) **சாவித்திரி எம்,** கோயம்புத்தூர், தமிழ்நாடு
13) **சாந்தி பாப்பா,** மார்த்தாண்டம், தமிழ்நாடு
14) **உஷா சுப்பிரமணியன்,** சென்னை, தமிழ்நாடு
15) **வசுமதி ஆர்,** சென்னை, தமிழ்நாடு

அன்னையர் தினமான மே 12, 2019 அன்று குட்ஷெஃபர்டு கான்வென்ட், நுங்கம்பாக்கம், சென்னை என்ற முகவரியில் நடைபெற உள்ள சிறப்பு விழாவில், இவர்கள் அனைவரும் கீழ்கண்டவாறு கவுரவிக்கப்பட உள்ளனர்:

(1) தலைசிறந்த பெற்றோருக்கான சான்றிதழ் மற்றும் சிறப்பு சுழற்கோப்பை.
(2) ரூ.15,000/- ரொக்கப்பரிசு
(3) சிறப்பு பரிசு பெட்டகம்
(4) ஸ்ரீ அருணோதயம் அறக்கட்டளையின் சேவைகளுக்கு இலவச ஒத்துழைப்புக்கான சிறப்பு வாழ்நாள் சலுகை அட்டை

விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொருவரது வாழ்க்கை கதையும் படமாக்கப்பட்டிருப்பதோடு, அந்தப் படம் 800-க்கும் மேற்பட்ட விருந்தினர்கள் மற்றும் பல்வேறு உடல் திறன் குறைபாடுடைய தலைசிறந்த ஆற்றலாளர்கள் மற்றும் இதர தரப்பினர் பங்கேற்கும் நிகழ்ச்சியில் திரையிடப்பட உள்ளது. இந்த விருதுகளை வழங்குவதன் மூலம், ஊக்கமளிக்கக் கூடிய குடும்ப அனுபவங்களை பகிர்ந்து கொள்வதன் வாயிலாக, நாடு முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான சிறப்புக் குழந்தைகளின் குடும்பத்தினரிடம் நம்பிக்கையை ஏற்படுத்தி, மேலும் உள்ளார்ந்த சமுதாயத்தை படைப்பதற்கான பயணத்தில் ஊக்கமளிப்பதே ஸ்ரீ அருணோதயம் அமைப்பின் நோக்கம்.

2019 விருது வழங்கும் நிகழ்ச்சி பற்றிய கூடுதல் தகவல்களுக்கு கீழ்கண்ட இணையதளத்தைக் காணவும்.

https://sriarunodayam.org/special-mom-award-2019-event-finalist/

* பல்வேறு உடல் குறைபாடுகள், மருத்துவ ரீதியான குறைபாடுகள், உணர்ச்சி ரீதியான சிக்கல்கள் மற்றும் மனநல குறைபாடு மற்றும் ஆட்டிசம், ஏடிஎச்டி, பெருமூளைவாதம், டவுன்சின்ரோம், வலிப்பு நோய்,செவித்திறன் குறைபாடு, பார்வைக் குறைபாடு, டிஸ்லெக்ஸியா, கற்றல் குறைபாடு, பழக்க வழக்க குறைபாடு போன்ற பல்வேறு அறிவுத்திறன் குறைபாடுடைய சிறப்புக் குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி அவசியம்.

## ஸ்ரீ அருணோதயம் அமைப்பின் சிறப்பு அன்னையர் விருது பற்றி:

ஸ்ரீ அருணோதயம் அமைப்பின் “சிறப்பு அன்னையர்” விருது, சிறப்புக் குழந்தைகளின் அன்னையர்களை கவுரவித்து அவர்களுக்கு ஊக்கமளிக்கக் கூடிய, தனித்துவமான இந்தியாவிலேயே முதலாவதாக வழங்கப்படும் விருதாகும்.

இந்த விருது வழங்கும் திட்டத்தை 2016-ஆம் ஆண்டு உருவாக்கியபோது, சிறப்புக் குழந்தைகள் மற்றும் பெருமளவு

தவறான புரிதலுக்கு ஆளாகும் அவர்களது குடும்பத்தினர், பாகுபாடு காட்டுவது மற்றும் மதிப்பிடுவது போன்றவற்றில் சமுதாயத்தின் பிரதிபலிப்பில் மாற்றத்தை உருவாக்குவதே எங்களது அமைப்பின் தொலைநோக்குச் சிந்தனையாக இருந்தது. சிறப்புக் குழந்தைகளுடன் வாழும் குடும்பத்தினரின் துணிச்சலான மனப்பான்மையையும் அவர்களது திறமையையும் வெளிச்சத்திற்கு கொண்டு வருவதன் தொடக்கமாகவே இந்த விருது உருவாக்கப்பட்டது. இது போன்ற தைரியமான அன்றாட தியாகங்கள் பெரும்பாலும் கண்டுக்கொள்ளப்படாமலேயே உள்ளது. எனவே தான், சமுதாயத்தால் இன்னும் கண்டுகொள்ளப்படாமல் உள்ள, சிறப்புக் குழந்தைகளின் அன்னையைர்களது உறுதிப்பாடு மற்றும் ஒருமைப்பாட்டை அங்கீகரிக்கும் விதமாக, ஸ்ரீ அருணோதயம் அமைப்பு இந்த பிரத்யேக விருதை உருவாக்கியது. விருதுபெறும் அன்னையர்கள், உண்மையான குடும்ப நற்பண்புகளை, சொந்த வாழ்விலும், சர்வதேச அளவிலும் நல்ல முறையில் நிலைநிறுத்தக்கூடியவர்களாகவும், சர்வதேச அளவில் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாகவும் திகழ்வார்கள்.

முந்தைய சுற்றுக்கள் மற்றும் விருதுபெற்றவர்களைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள கீழ்க்காணும் இணையதளத்தைக் காணவும்.

2018: https://sriarunodayam.org/special-mom-award-2018-post-event/

2017: https://sriarunodayam.org/special-mom-post-page/

## அருணோதயம் அமைப்பைப் பற்றி:

ஸ்ரீ அருணோதயம், பெற்றோரால் கைவிடப்பட்ட அறிவுத்திறன் குறைபாடுடைய குழந்தைகள் காப்பகமாக, சென்னை, கொளத்தூரில் செயல்பட்டு வருகிறது. கடந்த 17 ஆண்டுகளாக, இந்த இல்லம், மருத்துவமனைகள், ரெயில் நிலையம் மற்றும்

பேருந்து நிலையங்கள் போன்ற பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களிலும், குப்பைத் தொட்டிகளிலும் விட்டுச் செல்லப்பட்ட குழந்தைகளை பத்திரமாகவும், நலன் காக்கும் சுழலுடன் கூடிய இல்லமாகவும் இயங்கி வருகிறது. எங்களது அமைப்பு, சமுகநலத்துறை மற்றும் இதுபோன்ற குழந்தைகளின் மறுவாழ்வுக்காக பாடுபட்டுவரும் குழந்தைகள் நலக் குழுக்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறது. சிறப்புக் குழந்தைகள் இழந்த / வீடு மற்றும் குடும்ப சுழல் அவர்களுக்கு கிடைக்கச் செய்ய ஸ்ரீ அருணோதயம் பாடுபட்டு வருகிறது.

[ இல்லத்தைப் பற்றியும், அதில் தங்கியுள்ள குழந்தைகள் மற்றும் பல்வேறு செயலபாடுகளைப் பற்றி அறிய, https://sriarunodayam.org என்ற இணையதளத்தைக் காணவும்.]

**ஊடகத் தொடர்புக்கு :**


1. Iyyappan Subramaniyan (Founder Managing Trustee) +91-9444915803
   iyyappan@sriarunodayam.org
2. Althea D’Sylva (Head-Communications) +91-9840350120
   althea.dsylva007@gmail.com